1972 டிசம்பர் 2]

Committee to examine water pollution

*8 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the details of the composition of the panel to examine the water pollution; and

(b) the qualifications on which the panel of Members were selected?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) நீர் மற்றும் சாக்கடை கழிவை தூய்மைப்படுத்துதல் பற்றிய குழு, கீழ்க்கண்ட அதிகாரிகளையும் அலுவல் சார்பற்றவர்களையும் உறுப்பினர்களாக சமீபத்தில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது :—

1. மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத் துறை இயக்குநர்—தலைவர்.

2. தலைமைப் பொறியாளர் (பொது உடல்நலப் பொறியியல் நகராட்சிப்பணிகள்) தலைமைப் பொறியாளர் (தமிழ்நாடு நீர் சாக்கடைக் கழிவு வாரியம்)—உறுப்பினர்.

3. மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை கூட்டு இயக்குநர்—உறுப்பினர்.

4. இயக்குநர், கிங் நிலையம், கிண்டி—உறுப்பினர்.

5. திரு. டி. என். எஸ். ராகவாச்சாரி, ஓய்வு பெற்ற மூத்த பொது உடல் நல உதவியாளர்—அலுவல் சார்பற்ற உறுப்பினர்.

6. திரு. கே. ஜி. வீரராகவன், ஓய்வுபெற்ற தலைமை நீர்ப் பகுப்பாய்வாளர்—அலுவல் சார்பற்ற உறுப்பினர்.

7. தலைமை நீர்ப்பகுப்பாய்வாளர்—உறுப்பினர், செயலாளர்.

(இ) குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் தண்ணீர் மற்றும் சுற்றுப்புறம் கெடுதல், பொருள்பற்றிய நெருங்கிய தொடர்புடைய துறைகளின் தலைவர்கள் ஆவார்கள். அலுவல் சார்பற்ற இரண்டு உறுப்பினர்கள் தங்களுடைய முந்திய அனுபவத்தின் காரணமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தக் குழு தன்னுடைய பணியை தொடங்கிவிட்டதா, எத்தனை காலத்திற்குள் அந்தப் பணியை முடிக்கும்? இந்த வாட்டர் பொல்யூஷனால் காமாலை நோய் வருவதாகத் தெரிகிறது. அதுபற்றி

ஆராய்ந்து உடனடியாக பரிகாரம் காண அந்தக் குழுவிற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காமாலை நோய் வருவதற்குக் காரணம் குடி தண்ணீர் திட்டத்தில் கோளாறு இருந்தால் தான் வர முடியும். இந்தத் திட்டம் வேஸ்டேஜ் வாட்டர் பற்றியதாகும். இந்தக் குழு 18-5-72 அன்றுதான் அமைக்கப்பட்டது. இனிதான் தீவிரமாகப் பரிசீலனையில் ஈடுபடும். தனிப்பட்ட இடத்தில் ஏதேனும் குறை இருந்தால் அதைத் தனியாக பரிசீலிக்கலாம்.

DR. H. V. HANDE: Sir, on a point of order. Now it is exactly 12 Noon and as the House commenced its proceedings at 11 a.m. the Question Hour is supposed to have started at that time and it is customary that after one hour Question-Hour is over. According to the rules, the Speaker has to take the permission of the House to continue the Question Hour. That is the usual procedure. Therefore, I would like to know whether it is in order to continue the Question Hour without taking the permission of the House. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேள்வி நேரத்தை முடித்துவிடலாம்.

Recommendations of Wage Board for Sugar Industry

@ *9 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether any panel has been set up to go into the implementation of the Sugar Wage Board recommendations; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ): சர்க்கரைத் தொழிலுக்கான இரண்டாவது ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயற்படுத்துவது குறித்து விவாதித்து முடிவு செய்யும் பொருட்டு 1971 அக்டோபரில் சர்க்கரைத் தொழிலுக்கான முத்தரப்புக் குழு ஒன்றை அரசு அமைத்தது. அந்த முத்தரப்புக் குழுவின் அமைப்பாளர் சென்னையிலுள்ள தொழி

@ விதி 35 (4)-இன் கீழ், போடப்படாத வினாக்கள் 9 முதல் 20 வரை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பட்டுள்ளன.